தேர்வுகள் மிக மிக அவசரம்

**சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08**

**ந.க.எண். 7316/அ5/2023 நாள். 10 .03 .2023**

**பொருள்** பள்ளிக் கல்வி – சென்னை மாவட்டம் – அரசுத் தேர்வுகள் பத்தாம் வகுப்பு/ மேல்நிலை முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் மார்ச் -2023ஆம் நடைபெறுதல் – பறக்கும் படை உறுப்பினர்கள் நியமித்தல் – சார்பாக.

**பார்வை**
1. அரசாணை (வாலாயம்) எண்.41, பள்ளிக் கல்வித் (அதே) துறை நாள். 02.03.2023
2. சென்னை -06, அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க.எண்.000940/எச்1/2023, நாள். 03.03.2023
3. சென்னை-06, தமிழ்நாடு தொடக்கப் பள்ளி இயக்குநரின் செயல்முறைகள் க.ந.எண். 21/தொகஇ/பிசி/2023, நாள். 03.03.2023

………………..

மேற்காண் பொருள் குறித்து பார்வை 3ல் கண்டுள்ள செயல்முறைகளில் கீழ்க்கண்டவாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. 2022-2023 ஆம் கல்வியாண்டு மார்ச் 2023-ல் நடைபெறவுள்ள பத்தாம் வகுப்பு, மேல்நிலை முதலாம் மற்றும் இரண்டாமாண்டு பொதுத் தேர்வுப் பணிகளுக்கு வருவாய் மாவட்ட அளவில் தேர்வு மையங்களை பார்வையிட்டு கண்காணித்திட பார்வை (1)-ல் காணும் அரசாணை மற்றும் பார்வை (2)-ல் காண் அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுசமயம் பொதுத் தேர்வு நடைபெறும் திருச்சி மாவட்ட தேர்வு மையங்களை கண்காணிக்கும் பொருட்டு தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு உதவியாக செயல்பட கீழ்க்கண்ட ஆசிரியர்களுக்கு பறக்கும் படை (Flying Squad) உறுப்பினர்களாக நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

Scanned with OKEN Scanner

பறக்கும் படை உறுப்பினராக தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்களை தேர்வுப் பணியில் பணிபுரியும் வகையில் 10.03.2023 அன்று முற்பகல் உடன் பணியிலிருந்து விடுவிக்குமாறும், அவர்கள் அனைவரும் பேராசிரியர் அன்பழகனார் கல்வி வளாகத்தில் உள்ள தொடக்கக் கல்வி இயக்குநரின் அறிவுரைகளை பெறுமாறும் அறிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் அப்பணியிலிருந்து உடன் விடுவிக்குமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ.எண் | ஆசிரியர் பெயர் மற்றும் பதவி | பணிபுரியும் பள்ளி |
|---|---|---|
| 1 | எஸ்.இராஜசேகர்<br>முதுகலை ஆசிரியர் (கணிதம்) | ப.செ.க அரசினர் மேல்நிலைப் பள்ளி, கோடம்பாக்கம், சென்னை-24 |
| 2 | கே.ரமேஷ்<br>முதுகலை ஆசிரியர் (வரலாறு) | எம்.சி.டி.எம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, புரசைவாக்கம், சென்னை-84 |
| 3 | வே.லோகேஸ்<br>உடற்கல்வி ஆசிரியர் | பிடி.லி.சி என். மேல்நிலைப் பள்ளி,சூளை, சென்னை-112 |
| 4 | கே.பாலாஜி<br>உடற்கல்வி ஆசிரியர் | டி.ஆர்.பி.சி.சி.சி மேல்நிலைப்பள்ளி, பெரம்பூர், சென்னை-11. |

முதன்மைக்கல்வி அலுவலர்

பெறுநர்

1. சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் (தலைமையாசிரியர் வழியாக)
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை) தென் சென்னை

நகல்

சென்னை-06, தொடக்கப் பள்ளி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

Scanned with OKEN Scanner